III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

O.S.40/2017

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 13-02-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : ேஹம மாலினி | Calling | : |
| Father's Name | : | Taluk | : |
| Age | : | Village | : |

**<u>பிரதிவாதிகள் 2 மற்றும் 3 தரப்பின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

தாவா ஏ அட்டவணையில் முதலாம் ஐட சொத்திற்கு கதவு எண் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அதற்கு கதவு எண் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்தை ஒட்டி எனக்கு ஒரு சொத்து உள்ளது. அந்த எனது சொத்தின் கதவு எண் எனக்கு தெரியாது. அந்த எனது சொத்தில் வாடகைதாரர் இருந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த வாடகைதாரர்களின் பெயர் சித்திக் மற்றும் அன்வர். சித்திக் மூன்று கடைகளிலும் அன்வர் இரண்டு கடைகளிலும் குடியிருந்து வருகிறார். மேற்கூறிய வாடைதாரர்களிடமிருந்து நான் நேரடியாக வாடகை வசூலித்து வருகிறேன். ஏ அட்டவணை சொத்தில் தரை தளத்தில் இரண்டு கடைகள் உள்ளது. அந்த கடைகளில் முருகேசன் மற்றும் ஒரு இஸ்லாமிய நபர் குடியிருந்து வருகிறார்கள். அந்த இஸ்லாமிய நபரின் பெயர் எனக்கு தெரியாது. முருகேசன் மற்றும் அந்த இஸ்லாமிய நபர்களிடமிருந்து நான் வாடகை வசூலித்து வருகிறேனா என்றால் ஆம். முருகேசனிடமிருந்து மாத வாடகையாக ரூ.4,500 மும் அந்த இஸ்லாமிய நபரிடமிருந்து மாத வாடகையையாக ரூ.4,000 பெற்று வருகிறேன். இந்த இரண்டு நபர்களிடமிருந்து மாத வாடகையாக மொத்தம் ரூ.8,500 பத்து வருட காலமாக பெற்று வருகிறேன். ஆக மொத்தம் பத்து வருடங்களாக நான் ரூ.10,02,000 பெற்றுள்ளேன். மேற்கூறிய சொத்திர் எனக்கு 1/3 பங்கு உள்ளது என்றால்

சரிதான். மீதமுள்ள 2/3 பங்கை நான் பிரதிவாதிகளிடம் கொடுத்து வருகிறேனா என்றால் இல்லை. எனது வழக்குரையில் வாடகை தாரர்களின் பெயர் மற்றும் மாத வாடகை தொகை விவரம் ஆகியவற்றை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா ஏ அட்டவணையில் ஐடம் எண்.2 ல் கிரி என்பவர் வாடகைக்கு இருந்து வந்தார். அவர் தற்போது காலி செய்துவிட்டார். மேற்கூறிய கிரியிடமிருந்து மாத வாடகையாக ரூ.6,000 பெற்று வந்தேன். அதில் எனது 1/3 பங்கு போக மீதமுள்ள 2/3 பங்கை பிரதிவாதிகளிடம் கொடுத்து வருகிறேனா என்றால் இல்லை. ஆந்திர பிரதேச மாநிலத்திலுள்ள எனது மாமியாருக்கு சொந்தமான விவசாய நிலங்களில் யார் பயிர் செய்து வருகிறார்கள் என்றால் அவரின் சகோதரர் பயிர் செய்து வருகிறார். அதற்கு உரிய மகசூல் வாடகை என்னவென்று எனக்கு தெரியாது. எனது மாமயிார் இறந்த பின்னர் அந்த நிலங்களை நான் கையகப்படுத்தி மகசூலை நான் அனுபவித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்கூறிய முருகேசன் மற்றும் இஸ்லாமிய நபரான கனி ஆகிய இருவரும் மாத வாடகையை இரண்டாவது பிரதிவாதியிடம் கொடுத்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. முருகேசன் மற்றும் கனி ஆகியோர் வாடகையை சரிவர செலுத்தாமல் இருந்த காரணத்திற்காக அவர்கள் மீது இரண்டாவது மற்றும் மூன்றாவது பிரதிவாதிகள் வாடகை பாக்கி கேட்டு ஒரு அசல் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்குகளில் பூந்தமல்லி சார்பு நீதிமன்றத்தால் தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. முருகேசன் மற்றும் கனி ஆகிய இருவருக்கும் 2 தவது மற்றும் 3 வது பிரதிவாதிகள் வாடடைக பாக்கி கேட்டு அறிவிப்பு அனுப்பி அதற்கு அவர்கள் பதில் அறிவிப்பு அனுப்பியதை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன். அவற்றின் நகலை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். எனது பிராதுடன் 22.04.2014 தேதியிட்ட இரண்டாம் பிரதிவாதி வாடகைதாரர்களுக்கு கொடுத்த அறிவிப்பின் நகலை தாக்கல் செய்துள்ளேன். அதே போல் எனது பிராதுடன் 06.05.2014 தேதியிட்ட வாடகைதாரர் அனுப்பிய பதில் அறிவிப்பின் நகலையும் தாக்கல் செய்துள்ளேன். மேலும் எனது பிராதுடன் இரண்டாம் பிரதிவாதி அனுப்பிய மறு பதிலின் நகலையும் தாக்கல் செய்துள்ளேன். மேற்கூறிய மூன்று ஆவணங்களையும் எனது வாடகைதாரர்கள் கொடுத்தார்கள். ஐடம் எண்.1 சொத்திலுள்ள இரண்டு கடைகளுக்கான வீட்டு வரி விதிப்பு எனது மாமியார் பெயரில் உள்ளது. அந்த வீட்டு வரி ரசீதுளை

நான் தாக்கல் செய்துள்ளேனா என்றார் இல்லை. மின் இணைப்பு அந்த இரண்டு கடைகளுக்கும் கொடுக்கப்படுள்ளதா என்றால் ஆம். அந்த மின் இணைப்பு 3 வது பிரதிவாதி கிரிதர் பெயரில் உள்ளது. வீட்டு வரி ரசீதும் கிரிதரன் பெயரில் தான் உள்ளது என்றும் எனது மாமியார் பெயரில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் இந்த இரண்டு கடைகளின் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். எனது மாமியார் இந்த இரண்டு கடைகளையும் உயில் மூலம் 2 வது பிரதிவாதியான இந்துமதிக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. என்னை பொருத்தவரை இரண்டு கடைகள் எனது மாமியார் பெயரில் உள்ளது. மற்ற ஒரு கடை எனது கணவர் பெயரிலும், எனது மாமியார் பெயரிலும், எனது கணவரின் சகோதரர் பெயரிலும் உள்ளது. ஆனால் அதன் சுவாதீனம் எனது மாமியார் பெயரில் இருந்தது. எனது மாமியார் இறந்த பின்னர் அந்த ஒரு கடைக்கான மாத வாடகையை யார் வசூலித்து வருகிறார்கள் என்றால் நான் வசூலித்து வருகிறேன். எனது பங்கு தவிர மீதமுள்ள 2/3 பங்கை நான் 1 வது மற்றும் 2 வது பிரரிவாதிகளுக்கு கொடுத்து வருகிறேனா என்றால் இல்லை. நான் நேரடியாக இந்த சொத்துக்களை பராமரித்து வருகிறேன். அந்த சொத்து எம்.டி.எச் சாலையில் அமைந்துள்ளது. அந்த சாலையை நெடுஞ்சாலைத் துறை அகலப்படுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான். அது சம்மந்தமாக அறிவிப்பு எதுவும் எனக்கு கொடுக்கவில்லை. அந்த சொத்தை ஒட்டியுள்ள மற்றவர்களின் சொத்துக்களுக்கு நெடுஞ்சாலை துறையிடமிருந்து அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த அறிவிப்பை பற்றி நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அந்த அறிவிப்பு பற்றி எனக்கு தெரியாமல் இருந்ததற்கான காரணம் நான் அந்த சொத்தில் சுவாதீனத்தில் இருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ைஹதராபாத்தில் இருக்கும் போது எனது மாமியார் சென்னையில் சிகிச்சை எடுத்து வந்தார் என்றும் நான் அவரை பார்த்துக் கொள்ளவில்லை என்றும் மருத்துவ செலவுகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் மருத்துவ செலவுகளை செலுத்தியதற்கான ரசீது மற்றும் மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மாமியார் சென்னை அடையார் புற்று நோய் மருத்துவ மனையில் சிகிச்சை எடுத்து வந்தார் அதை காண்பிப்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மாமியார் எக்காலக்கட்டத்திலும் அடையார் புற்று நோய் மருத்துவ மனையில் சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றால்

சரியல்ல. எனது மாமியாரை முழுவதும் பார்த்துக் கொண்டது இரண்டாம் பிரதிவாதியான இந்துமதி மட்டும் தான் என்றால் சரியல்ல. மொத்த மருத்துவ செலவுகளையும் செலுத்தியது இரண்டாம் பிரதிவாதி தான் என்றால் சரியல்ல. இந்துமதி ஒரு நபரை நியமித்து அவர் மூலம் எனது மாமியாரை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. எனது மாமியார் நல்ல மனநிலையில் இருக்கும் போது அவர் சொத்து சம்மந்தமாக இரண்டாம் பிரதிவாதி அடைய வேண்டும் என்று ஒரு உயில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. எனது மாமியார் செட்டில்மென்ட் மூலம் தாவா சொத்துக்களை பெற்றார் என்றால் சரிதான். எனது மாமியார் தாவா சொத்துக்களுக்கு தனது பெயரில் உள்ள செட்டில்மென்ட் பத்திரத்தின் மூலம் உரிமையானவர் என்பதாகையால் அது குறித்து யாருக்கும் அந்த சொத்துக்களை எழுதி வைப்பதற்கு அவருக்கு முழு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. ஆதலால் இரண்டாம் பிரதிவாதிக்கு எனது மாமியார் எழுதி வைத்த உயில் குறித்து நான் கேள்வி எதுவும் எழுப்ப முடியாது என்றால் சரியல்ல. வேண்டுமென்றே மற்றும் நான் இரண்டாவது மற்றும் மூன்றாவது பிரதிவாதிகளை அலைக்கழிக்க வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆந்திர பிரதே அரசின் குண்டுர் நகர கூடுதல் ஆணையராக பணிபுரிகிறேன்.